இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 210 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 27 – செவ்வாய்க்கிழமை 11 மார்ச் 2025 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 210 : Thiruvalluvar Year - 2056 - Maasi 27 - Tuesday 11 March 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள முரசொலி மாறன் கூட்ட அரங்கத்தில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழகப் பொருளாளரும், மக்களவை கழகக்குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ், பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மக்களவை தொகுதிகளை பாதுகாக்க முதல்வரின் சீரிய முயற்சிகளுக்கு துணை நின்று

# நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவோம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, மார்ச் 11-**

**மக்களவைத் தொகுதிகளைப் பாதுகாக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு துணை நின்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவோம் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் (09.03.2025) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் உள்ள முரசொலி மாறன் கூட்ட அரங்கத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**தீர்மானம் : 1**

**தமிழ்நாட்டின் மக்களவைத் தொகுதிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளுக்கு துணை நின்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவோம்**

தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாப்பது மட்டுமின்றி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கின்ற ஜனநாயகப் போராளியாகத் திகழ்கின்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் இந்திய நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்களின் குரல் ஓங்கி ஒலிக்கும் என உறுதியளிப்பதுடன், தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வில் தொடர்ந்து பாரபட்சம் காட்டி வருவதுடன், தமிழ்நாடு பல துறைகளிலும் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள இருமொழிக் கொள்கைக்கு எதிரான இந்தித் திணிப்பு முயற்சியையும் மேற்கொண்டு தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ளவிருக்கும் தொகுதி மறு சீரமைப்பிலும் தெளிவான பதிலைத் தராமல் குழப்பி வருகிறது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திய தமிழ்நாடு முதலிய தென்னிந்திய மாநிலங்களைப் பழிவாங்குகிற வகையில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிக்கும் பா.ஜ.க.வின் சதித் திட்டத்தைத் தெளிவாக உணர்ந்து, இப்பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கும் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொகுதி மறு சீரமைப்பு விவகாரத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய அனைத்து முயற்சிகளுக்கும் முழுமையாகத் துணை நிற்பதுடன் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினைகளை மு ன்வைத்துப் போராடி, தமிழ்நாட்டிற்குரிய நாடாளு மன்ற தொகுதிகளில் ஒன்று கூட குறையாத வகையிலும், நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்குரிய தொகுதிகளின் விகிதாசாரத்தைத் தக்க வைப்பதிலும் வெற்றியை ஈட்டுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

> ### முதல்வருக்குப் பாராட்டு!
>
> **மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திய தமிழ்நாடு முதலிய தென்னிந்திய மாநிலங்களைப் பழி வாங்குகிற வகையில் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சிக்கும் பா.ஜ.க.வின் சதித் திட்டத்தைத் தெளிவாக உணர்ந்து, இப்பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கும் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**

**தீர்மானம் : 2**

**மறு சீரமைப்பினால் தொகுதிகளை இழக்கும் மற்ற மாநிலங்களையும் ஒருங்கிணைத்து களம் காண்போம்**

தொகுதி மறுசீரமைப்பின் விளைவுகள் தமிழ்நாட்டின் நியாயமான உரிமைகளைப் பாதிக்கும் என்பதால் அந்த உரிமையைக் காக்கும் அறவழி முயற்சிகளில் தமிழ்நாட்டில் இதுவரை நடந்திராத வகையில், 50க்கும் மேற்பட்ட அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் நியாயம் பெறுவதற்கான இயக்கத்தை முன்னெடுத்திருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவாக நின்று, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதால் மக்களவைத் தொகுதிகளை இழக்க நேரிடும் அபாயத்தில் உள்ள ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலங்கானா, ஒடிசா, மேற்கு வங்கம், பஞ்சாப் என பாதிக்கப்படவிருக்கும் 7 மாநிலங்களைச் சார்ந்த கட்சிகளையும் ஒருங்கிணைத்துப் போராட்டக் களத்திற்கு அழைத்து வரும் பொறுப்பைக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து மேற்கொள்வர் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 3**

**தொகுதி மறு சீரமைப்பில் மாநில உரிமைகளை நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து செயல்படுவோம்**

நாடாளுமன்ற நிதிநிலை அறிக்கையின் இரண்டாவது கட்டக் கூட்டத்தொடர் மார்ச் 10ஆம் நாள் தொடங்கவுள்ள நிலையில், டெல்லியில் தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள், இந்தியா கூட்டணி உறுப்பினர்கள் மட்டுமின்றி ஜனநாயகத்தைக் காப்பதில் உறுதியாக உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் முன்னெடுத்துள்ள தொகுதி மறுசீரமைப்பில் மாநிலங்களுக்கான உரிமைகளை நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்றத்தில் இதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து பாதிப்படையவுள்ள மாநிலங்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையையும் அதன் விகிதாசாரத்தையும் காப்பாற்றுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் வரலாற்றுச் சாதனை!

# இந்தியா 3வது முறையாக சாம்பியன்!

## பரபரப்பான இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது!

துபாய், மார்ச் 11–

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் இந்தியா 3வது முறையாக கோப்பை வென்று வரலாற்று சாதனை படைத்தது. பரபரப்பான இறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்த வெற்றியை நாடு முழுவதும் கிரிக்கெட் ரசிகர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை ஒரு நாள் போட்டிகளை இந்தாண்டு பாகிஸ்தான் நடத்தியது. இதில் 8 அணிகள் பங்கேற்றன. லீக் மற்றும் அரை இறுதிச் சுற்றுகள் முடிவில் இந்தியாவும், நியூசிலாந்தும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

நடப்பு சாம்பியன் பாகிஸ்தான், தான் போட்டியிட்ட 3 போட்டிகளிலும் வெற்றி பெற முடியாமல் லீக் சுற்றிலேயே பரிதாபமாக வெளியேறியது. இந்நிலையில் துபாயில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா – நியூசி அணிகள் மோதின. டாஸ் வென்ற நியூசிலாந்து அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. இந்திய அணியில் மாற்றமின்றி முந்தைய போட்டியில் ஆடிய வீரர்களே இடம் பெற்றனர். நியூசிலாந்து அணியில் மேட் ஹென்றிக்கு பதில் நாதன் ஸ்மித் இடம் பெற்றிருந்தார். நியூசிலாந்து அணியின் துவக்க வீரர்களாக வில் யங், ரச்சின் ரவீந்திரா நிதானமாக ஆட்டத்தை தொடங்கினர்.

50 ஓவர் முடிவில் நியூசிலாந்து 7 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்தது. மைக்கேல் பிரேஸ்வெல் 53, நாதன் ஸ்மித் 0 ரன்னுடன் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர். இந்திய தரப்பில் வருண் சக்ரவர்த்தி, குல்தீப் யாதவ் சிறப்பாக பந்து வீசி தலா 2 விக்கெட்டுகள், முகம்மது ஷமி, ரவீந்திர ஜடேஜா தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். அதைத் தொடர்ந்து, 252 ரன் வெற்றி இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

துவக்க வீரர்களில் ஒருவரான கேப்டன் ரோகித் சர்மா, நியூசி பந்துகளை ஒருபுறம் துவம்சம் செய்ய, மறுபுறம் சுப்மன் கில் நிதானமாக ரன் சேர்க்க, 17 ஓவர் முடிவில் அணியின் ஸ்கோர் விக்கெட் இழப்பின்றி 100ஐ எட்டியது. அப்போது ரோகித் அரை சதம் கடந்து 68 ரன் எடுத்திருந்தார். சிறிது நேரத்தில் 18.4வது ஓவரில் கில் (31 ரன்), சான்ட்னர் பந்தில் பிலிப்சிடம் கேட்ச் தந்து அவுட்டானார். பின் வந்த விராட் கோஹ்லி அடுத்த ஓவரில் 1 ரன்னில் அவுட்டாகி பெருத்த ஏமாற்றத்தை தந்தார். 27வது ஓவரில் 76 ரன் (3 சிக்சர், 7 பவுண்டரி) எடுத்திருந்த ரோகித் சர்மா, ரவீந்திரா பந்தில் லாதமிடம் ஸ்டம்பிங் முறையில் அவுட்டாகி ரசிகர்களுக்கு அதிர்ச்சி தந்தார்.

பின்னர், ஹர்திக் பாண்ட்யா 18 ரன்னில் அவுட்டானார். 49 ஓவர் முடிவில் இந்தியா 6 விக்கெட் இழப்புக்கு 254 ரன் எடுத்து அபார வெற்றி பெற்றது. கே.எல்.ராகுல் 34, ரவீந்திர ஜடேஜா 9 ரன்னுடன் அவுட்டாகாமல் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியை அடுத்து ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பையை இந்தியா கைப்பற்றியது. ஐ.சி.சி. தொடர் இறுதிப் போட்டிகளில் வெல்ல முடியாத அணியாக திகழ்ந்த நியூசிலாந்தை இந்தியா நேற்று முன்தினம் வென்று தன் வல்லமையை நிரூபித்துக் காட்டியுள்ளது.

---

### மெட்ரோ ரயில் திட்டம்:

## போரூர் - பூந்தமல்லி வரை உயர்மட்ட பாதையில் கட்டுமானப் பணி நிறைவு!

*சென்னை, மார்ச் 11-*

*இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி வரையிலான 4வது வழித்தடத்தில் போரூர் - பூந்தமல்லி வரையிலான உயர்மட்டப் பாதையில், கடைசி பாலத்தின் கட்டுமானப்பணி வெற்றிகரமாக நிறைவடைந்தது.*

*சென்னையில் இரண்டாம்கட்ட மெட்ரோ ரயில் திட்டம், 116.1 கி.மீ. தொலைவுக்கு 3 வழித்தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இதில் கலங்கரை விளக்கம் - பூந்தமல்லி பைபாஸ் வரையிலான 4வது வழித்தடத்தில் கலங்கரை விளக்கம் முதல் கோடம்பாக்கம் மேம்பாலம் வரை சுரங்கப் பாதையாகவும், கோடம்பாக்கம் பவர்ஹவுஸ் முதல் பூந்தமல்லி பைபாஸ் வரை உயர்மட்டப் பாதையாகவும் அமைகிறது.*

*9 சுரங்க மெட்ரோ ரயில் நிலையங்களும், 18 உயர் மட்ட மெட்ரோ ரயில் நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன. தற்போது, பல்வேறு இடங்களில் சுரங்கப்பாதை, உயர்மட்டப் பாதை பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன.*

*குறிப்பாக, பூந்தமல்லி - போரூர் இடையே பல இடங்களில் தண்டவாளம் அமைக்கும் பணி, பொறியியல் கட்டுமானப்பணி ஆகியவை முழுவீச்சில் நடைபெறுகின்றன. இந்த வழித்தடத்தில் ஒரு பகுதியான போரூர் - பூந்தமல்லி வரை உயர்மட்டப் பாதையில் கடைசி பாலத்தின் கட்டுமானப்பணி நிறைவடைந்தது.*